1972 மார்ச் 9]

திரும்பப் பெறக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று. அந்த அதிகாரத்தின்படி நிலச் சொந்தக்காரர் யாருக்குப் பட்டா செய்து கொடுத்திருந்தாலும் அது திரும்பப் பெறப்படும்

கோமுகி நீர்த் தேக்கப் பகுதியில் தொழிற்பேட்டை

* 388 வினா—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்விராயன் மலைப் பகுதியில் கிடைக்கும் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி கோமுகி நீர்த்தேக்கப் பகுதியில் தொழிற்பேட்டை ஒன்று துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை.

திரு. ந. நாச்சியப்பன் : கல்விராயன்மலைப் பகுதியில் மூங்கில் காடுகள் இருப்பதால் அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையைக் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் காடுகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய கையகத்திற்கு வந்ததற்குப் பின்னாலே பரிசீலிக்கலாம்.

பல்லடத்துக்கு முன்சீப் கோர்ட்

* 389 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடத்தில் முன்சீப் கோர்ட் ஒன்று திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : பல்லடம் தாலுக்கா ஹெட் குவார்டர்ஸ். அங்கே ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்தினால் போக்குவரத்துக்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே வாரத்திற்கு 3 தினங்களாவது அங்கே ஒரு முன்சிப் கோர்ட்டை ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.